சடையம்பட்டி ஊராட்சி செயல் அலுவலர்/மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்



முன்னிலை: திருமதி.மா.கிருஷ்ணவேணி

நாள்:30.03.2024

பொருள்: மனைப்பிரிவு - விருதுநகர் மாவட்டம் - சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் - சடையமட்பட்டி ஊராட்சி - சர்வே எண்: 253/5A1, 5A2 ல் (4.40 ஏக்கர்) 87 மனைப் பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - கட்டணங்கள் செலுத்தப்பட்டது - மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி - உத்தரவிடல்.

பார்வை: 1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் மாவட்டம், அவர்களின் கடிதம் ந.க.எண். 1162/202/விருமா, நாள்: 02.12.2021.
2. மனுதாரர் திரு.ஜெய்கணேஷ், திருப்போரூர், அவர்களின் விண்ணப்பம், நாள்: 23.03.2024
3. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் மாவட்டம், அவர்களின் கடிதம் மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண் 31/2021

உத்தரவு

சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் - சடையமட்பட்டி ஊராட்சி - சர்வே எண்: 253/5A1, 5A2 ல் (4.40 ஏக்கர்) 87 மனைப் பிரிவுகளுக்கு பார்வை (1)ல் காணும் கடிதம் வாயிலாக தொழில்நுட்பம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைநிலத்தில் அமைந்துள்ள 87 மனைகளுக்கு கூராய்வு கட்டணமும் மற்றும் பார்வை 3-ல் காணும் கடிதத்தின்படி இடத்தின் சந்தை மதிப்பு ஏக்கருக்கு 3 % நிலப்பயன் மாற்றக் கட்டணமும் பெற்றுக் கொண்டு இறுதி ஒப்புதல் வழங்குமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, செலுத்தப்பட வேண்டிய கூராய்வு கட்டணம் மனை 1 க்கு ரூ.1000/- வீதம் 87 மனைக்கு ரூ.87000/-ம் மற்றும் சந்தை மதிப்பு ஏக்கருக்கு 3 % என்ற அடிப்படையில் 4.40 ஏக்கருக்கு நிலப்பயன் மாற்றக் கட்டணமாக ரூ.198000/-ம் ஆக மொத்தம் ரூ.285000/- ஐ வங்கி வரவோலை எண் 493426 நாள் 26.03.2024 ன்படி தொகை ரூ 285000/- ஊராட்சி பொதுநிதிக் கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

சர்வே எண்கள்	மனைப்பிரிவு எண்கள்	மனைப்பிரிவு எண்ணிக்கை	மொத்தப் பரப்பளவு
253/5A1, 5A2	சாதாரண வகை மனைகள்	57	4.40ஏக்கர்
	குறைந்த வருவாய் பிரிவினர் மனைகள்	30	
.	மொத்தம்	87	

நிபந்தனைகள்

1) பொதுபயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மனுதாரர் பத்திரப்பதிவு செய்து கொடுத்த இடங்களை தனது சொந்த பொறுப்பில் அரசின் பெயரில் பட்டாமாறுதல் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

2) மனுதாரர் பொதுபயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கட்டுமானம் ஏதும் மேற்கொள்ளக் கூடாது. பொதுபயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் கம்பிவேலி அமைக்கப்பட வேண்டும்.

3) தனிமனைகள் குறித்து நிலஉரிமம் மற்றும் மனை அளவுகள் விபரம் குறித்த முழுமையான ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும். மேலும் அவற்றில் ஏதேனும் குறைபாடுகளோ முறைகேடுகளோ தெரிய வரும்பட்சத்தில் மேற்படி உத்தரவு எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

(P.T.O)

M.krishnaveni.
தலைவர்
சடையம்பட்டி ஊராட்சி

4) தெருவிளக்குகள் 20 எண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

5) மனைப்பிரிவு இடத்தில் அமைந்துள்ள மண்சாலைகளை தார்சாலைகளாக அமைக்க வேண்டும்.

6) அனுமதி வழங்கப்பட்ட 84 மனைப்பிரிவுகளில் 65 விழுக்காடு விற்பனை செய்யப்படுவதற்குள் மேற்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் மேற்படி உத்தரவு எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

M. Muthumani.

செயல் அலுவலர்/தலைவர்,
சடையம்பட்டி ஊராட்சி

தலைவர்
சடையம்பட்டி ஊராட்சி

இணைப்பு: மனைப்பிரிவு அங்கீகார வரைபடம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்

பெறுநர்:

திரு.ஜெய்கணேஷ்,
த/பெ ஆறுமுகம்
36, வணிகர் தெரு,
திருப்போரூர்,
செங்கல்பட்டு மாவட்டம். -603110

நகல்:

1.துணை இயக்குர், மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், விருதுநகர்.
2.மாவட்ட பதிவாளர், பத்திரப்பதிவு அலுவலகம், விருதுநகர்.
3.மாவட்ட ஆட்சியர் (ஊராட்சிகள் பிரிவு), விருதுநகர்.
4.சார்பதிவாளர் அலுவலகம், சாத்தூர்.

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை,சென்னை

ந.க.எண்.1162/2021 விருமா, நாள்.3 .12.2021.

மனைப்பிரிவு ம.வ/ந.ஊ,இ.எண்.31 /2021.

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

/2/

8. மனுதாரர்களால் மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ள தலைவர், சடையம்பட்டி ஊராட்சி, சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களிடம் இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் அனுமதி/இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில், ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/ விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மற்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission/Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission/Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

விபரம்		பரப்பளவு விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	17,800 ச.மீ. (4.40 ஏக்கர்)
ஒதுக்கிய மனைகள்	-	87 எண்ணம்
பொது ஒதுக்கீடு மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது.		பூங்கா பரப்பளவு - 1308.80 ச.மீ. (10.37%)
2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள்	-	5180.58 ச.மீ.
3.உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு	-	67.96 ச.மீ. (0.53%)
4.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது.	-	66.41 ச.மீ.(0.52%)
விற்பனைக்குரியவை EWS மனைகளின் பரப்பு மனைஎண்கள்	- -	1797.92 ச.மீ. (14.24%) 30 எண்ணம் (52 முதல் 81 வரை)

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.